DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# MCOP. No. 42/2020

Deposition of Witness : PW1

| | |
|---|---|
| Name - திரு. நாகேந்திரன் | Father's Name - நாகராஜ் |
| Village\City - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.09.2023.

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**2ம் எ.ம.கு.வி.:**

கேள்வி : மனுவானது உங்கள் தகப்பனார் விபத்தில் இறந்ததால் நஷ்டஈடு கேட்டு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் தகப்பனார் கார் ஓட்டிச் சென்றார் என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : வேறு எந்த ஆவணமும் மனுவில் சொன்ன விபரத்தில் ஈடுபடவில்லை என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : விபத்து சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை உங்கள் தகப்பனார் மீது தான் பதியப்பட்டுள்ளது என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : விபத்தை ஏற்படுத்தியவர் உங்கள் தகப்பனார் தான் என்றால்?

பதில் : சரியல்ல

கேள்வி : இந்த வழக்கு உங்கள் தகப்பனார் இறந்துவிட்டதால் முடித்து வைக்கப்பட்டது என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : ஆகையால் விபத்து ஏற்படுத்திய நபரே நஷ்டஈடு மனு தாக்கல் செய்ய முடியாது என்றால்?

பதில் : சரியல்ல

கேள்வி : உங்கள் தகப்பானர் விபத்து சமயத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து மாதம் ஒன்றுக்கு ரூபாய் 18 ஆயிரம் சம்பளம் வாங்கினார் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால்?

பதில் : ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை

கேள்வி : நீங்களும் மற்ற மனுதாரர்களும் விபத்து சமயத்தில் உங்கள் தகப்பனாரை சார்ந்து இல்லை என்றால்?

பதில் : சரியல்ல

கேள்வி : நீங்களும் மற்ற மனுதாரர்களும் உங்கள் தகப்பனாரும் ஒரே குடும்பமாக வாழ்ந்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : சின்னத்தாய், சாந்தி ஆகியோர்கள் அவர்களது வாழ்க்கை துணையுடன் தனியாக வசித்து வருகிறார்கள் என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : வயது முதிர்வின் காரணமாக உங்கள் தகப்பனார் விபத்து சமயத்தில் வேலை எதுவும் செய்யாமல் வீட்டில் இருந்து வந்தார் என்றால்?

பதில் : சரியல்ல

கேள்வி : பல்வேறு தரப்புகளில் நீங்கள் கேட்டிருந்த நஷ்டஈட்டுத் தொகை அதிகம் என்றாலும், விபத்து உங்கள் தகப்பனாரின் கவனக்குறைவால் தான் நிகழ்ந்தது என்றாலும்?

பதில் : சரியல்ல

கேள்வி : ஆகையால் உங்கள் மனு 2 வது எதிர்மனுதாரரைப் பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால்?

பதில் : சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 04.09.2023 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN Digitally signed by S GOPINATHAN Date: 2023.09.05 15:18:57 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
04.09.2023.